
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • செப்டம்பர் 14, 2019

Weekly E-paper • SEPTEMBER 14, 2019







**கல்வியின் மீது தாக்குதல்**

நேர்காணல்: மா.உதயகுமார்

**கல்வியை முடக்கும் அரசு**

தலையங்கம்



**ஒரு மனிதன் ஒரு இயக்கம்**

நூலறிமுகம்: வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● செப்டம்பர் 14, 2019 Weekly E-paper ● SEPTEMBER 14, 2019

# தில்லைக்கோயில் வாடகைக்கு வேண்டுமா? தீட்சிதர்களை உடனே அணுகவும்!

● சுப. வீரபாண்டியன்

இன்றைய (14.09.2019) நாளேடுகளில், ஒரே நாளில் மூன்று செய்திகள் வெளிவந்துள்ளன. மூன்றுமே ஆன்மிகம், பக்தி தொடர்பானவை!

அவை, 1. சிவகங்கை அருகே பாசங்கரையைச் சேர்ந்த இருளப்ப சாமி என்பவர் நடத்திய ஜீவசமாதிக் கூத்து. 2. சிதம்பரம் தில்லைக்கோயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தைத் தீட்சிதர்கள் ஆடம்பரத் திருமணத்திற்கு வாடகைக்கு விட்ட வணிக நடவடிக்கை. 3. பிள்ளையார் சிலையைக் கரைக்கச் சென்ற 33 பேர் உயிரிழந்த துயரம்.

இவற்றை எப்படிப் பார்ப்பது? பக்தியின் பெயரால் நடைபெறும் மோசடிகள், பக்தியைக் காசாக்க முயலும் பார்ப்பனியம், மக்களின் அறியாமை என்று மூன்றாகப் பார்க்க வேண்டியுள்ளது.

செப்டம்பர் மாதம் 13 ஆம் தேதி நள்ளிரவு 12 மணிக்கு மேல் அதிகாலை 5 மணிக்குள் ஜீவசமாதி அடையப்போவதாகக் கூறி, சிவகங்கை அருகில் உள்ள பாசங்கரையைச் சேர்ந்த இருளப்ப சாமி என்பவர் ஊரையே கூட்டியுள்ளார். மாவட்ட ஆட்சியர் வேறு இரவு 11.30 மணியிலிருந்து அங்கு வந்து இரவு முழுவதும் அதே இடத்தில் இருந்துள்ளார். பாதுகாப்புக்காக 200 காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மக்கள் முன்னிலையில் பேசிய அந்தச் சாமியார், ஜீவசமாதி அடையப்போகும் செய்தியைச் சிவபெருமானே கனவில் வந்து தனக்குச் சொன்னதாகவும், அவர் ஜீவசமாதி அடைந்தவுடன், புரட்டாசி 1 முதல் 7 வரையில் தமிழ்நாடு முழுவதும் கனமழை பெய்யும் என்றும் கூறியுள்ளார். இப்படி ஒரு பக்தி அறிவிப்பையும், வானிலை அறிவிப்பையும் கலந்து சொன்ன சாமியார், இறுதியில் தனக்கு மூன்றரை லட்சம் ரூபாய் கடன் இருப்பதையும் ஒரு கொசுறுச் செய்தியாகச் சொல்லியுள்ளார். கடன் கொடுத்தவர்கள் கனவில் போய் சிவபெருமான் என்ன சொன்னார் என்று தெரியவில்லை.

சட்டம் ஒழுங்குச் சிக்கல் வந்துவிடுமோ என்ற வகையில் அங்கு வந்ததாக ஆட்சியர் சொல்லியுள்ளார். சாமியாரை நம்பி வந்ததாகவே மக்கள் கூறுகின்றனர்.



கடைசியில், சிவபெருமான் சொன்ன வாக்கைக் காப்பாற்றவில்லை போலிருக்கிறது. சாமியார் இப்போதும் நலமுடன் இருக்கிறார். காவல்துறையின் வேண்டுகோளை ஏற்று மக்கள் ஏமாற்றத்துடன் (!) கலைந்து சென்றுள்ளனர்.

அடுத்த செய்தி, தில்லைக்கோயில் தொடர்பானது. அந்தக் கோயிலை அங்குள்ள தீட்சிதர்கள், தங்களின் சொந்தச் சொத்துப் போலவே வைத்துள்ளனர். அவர்கள் வீட்டு நிகழ்ச்சிகளை அங்கேயே நடத்திக் கொள்கின்றனர். இப்போது பக்தி முற்றிப் போய்விட்டதால், சிவகாசித் தொழில் அதிபர் ஒருவரின் திருமணத்திற்கு வாடகைக்கும் விட்டுள்ளனர்.


இரவு 11 மணிக்கு நடை சாத்தப்பட்டுவிட்ட பிறகும், விடிய விடிய அங்கு அலங்கார வேலைகள் நடைபெற்றுள்ளன. போகிற போக்கில் ஆகமங்களெல்லாம் காற்றில் பறந்து விட்டன. காசு, பணத்தை விட ஆகமங்கள் பெரிதில்லை என்று திட்சிதர்கள் முடிவு செய்துவிட்டார்கள் போலிருக்கிறது.

ஒருவிதத்தில் நல்லதுதான். இனி நாம் சிதம்பரத்தில் கூட்டம் போடுவதென்றால், தில்லைக்கோயிலை வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம்.திராவிடர் கழகக் கூட்டங்களும் இனிமேல் தில்லைக் கோயிலில் நடக்கும் என்பது மகிழ்ச்சிதானே!

அப்புறம், பிள்ளையாரைக் கரைக்க ஏரிக்கும், கடலுக்கும் சென்றபோது, மத்திய பிரதேசத்தில் 18 பேரும், மராத்தியத்தில் 11 பேரும், தில்லியில் 4 பேரும் உயிரிழந்துவிட்ட செய்தியும் வந்துள்ளது. அவர்களின் குடும்பத்தினரோடு நாமும் துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம். அதே நேரத்தில், இன்னொரு செய்தியையும் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. சென்னையிலும், பிள்ளையார் சதுர்த்தியை ஒட்டி ஊர்வலங்கள் நடந்தன. அதில் பல இடங்களில் பணம் கேட்டு வன்முறைகள் அரங்கேறின. ஊர்வலத்தில் வந்த பலர் 'நிதானமாக' இல்லை என்பதைப் பலரும் கூறினர்.

இது ஆன்மீக பூமி என்று சிலர் கூறுகின்றனர். ஆன்மிகம் செல்லும் வேகத்தைப் பார்த்தால் எதிர்காலம் எப்படித் தாங்கி கொள்ளப் போகிறதோ என்று கவலையாய் இருக்கிறது! ●

## கடைசிச் செய்தி!



இந்திதான் இனிமேல் இந்தியாவின் ஒரே அலுவல் மொழியாக இருக்க வேண்டும் என்று இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தன் ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதையும் இந்தியில் மட்டுமே பதிவிட்டுள்ளார். எனவே இந்தி பேசும், இந்தி தெரிந்த மக்கள் மட்டுமே இந்தியக் குடிமக்கள். மற்றவர்கள் எல்லோரும் இரண்டாந்தர அடிமைகள் என்கிறார் அவர். சர்வாதிகாரம் வென்றதாகச் சரித்திரம் இல்லை.

காலம் விடை சொல்லும்.

# கல்வியின் மீது தாக்குதல் நடத்தும் மத்திய அரசு!

*கல்வித்துறையில் மிக வேகமாகவும் மறைமுகமாகவும் பல மாற்றங்களை மத்திய அரசு செய்து வருகிறது. சமூக நீதியைப் பாதிக்கும், மாநில உரிமைகளைப் பறிக்கும் மத்திய அரசின் செயல்பாடுகளைப் பற்றிக் கல்வியாளர்களுடன் பேசியவற்றிலிருந்து சில பகுதிகள்...*

நேர்காணல்:
மா.உதயகுமார்

## அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வரும் ஆபத்து!



**பிரின்ஸ் கஜேந்திர பாபு, கல்வியாளர்**

சென்ற ஆண்டு பட்ஜெட்டில், பல்கலைக்கழகங்களைத் தேர்ந்தெடுத்து உலகத் தரத்திலான பல்கலைக்கழங்களாக மாற்றுவது என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி இரண்டு பல்கலைக்கழகங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதில் தமிழ்நாட்டில் உள்ள அண்ணா பல்கலைக்கழகமும் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. 'Institute of eminence' என்று சொல்கிறார்கள். அதன்படி பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றால் ஆயிரம் கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். இந்த ஆயிரம் கோடி ரூபாயில் மத்திய அரசின் பங்கு என்ன, மாநில அரசின் பங்கு என்ன? மாநில அரசு நடத்தும் பல்கலைக்கழகத்திற்கு மாநில அரசுதான் பணம் கொடுக்க வேண்டும்.

காலேஜ் ஆஃப் என்ஜினியரிங் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. 1978 இல் அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அதற்கென தனிச்சட்டம் தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. அதன்பின் பல்துறை ஆளுமைகளை இப்பல்கலைக்கழகம் உருவாக்கி வருகிறது. அவர்கள் எல்லோரும் உலக அளவில் பல்வேறு முக்கியப் பணிகளில் பெரும்பங்கு ஆற்றி வருகிறார்கள். பிறகு அந்தப் பல்கலைகழகம் முதல் 200 அல்லது 300 இடங்களில் ஏன் வரவில்லை என்று கேட்கிறார்கள். அந்த நாடுகளின சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகளும் இங்குள்ள சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகளும் ஒன்றாக இருக்கின்றனவா? 'Institute of eminence' விதி முறைகளின்படி 25 சதவீதம் பேர் வெளிநாட்டு மாணவர்களாக இருக்கலாம். பல்கலைக்கழகத்திற்கு நிதி தன்னாட்சி, நிர்வாகத் தன்னாட்சி என்று சொல்கிறார்கள். அனைத்து மாணவர்களுக்குமான கட்டணத்தையும் பல்கலைக்கழகமே முடிவு செய்து கொள்ளலாம். ஆசிரியர்களுக்கான ஊதியத்தையும் பல்கலைக்கழகமே முடிவு செய்து வழங்க வேண்டும். இதற்கான நிதி ஆதாரங்களைப் பல்கலைக்கழகமே உருவாக்கிக்கொள்ள வேண்டும். மாணவர் கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர எப்படி பல்கலைக்கழகத்தால் நிதி ஆதாரத்தை உருவாக்க முடியும்? கட்டணம் உயர்த்தப்படும் போது எப்படி ஏழை மாணவர்கள் படிக்க முடியும்?

தமிழ்நாடு அரசு 69% இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றிவருகிறது. இது தொடருமா? தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு கிடையாது. தன்னாட்சி அதிகாரம் பெறும் போது தமிழக அரசின் கொள்கை பின்பற்றப்படுமா அல்லது நுழைவுத் தேர்வு நடத்தப்படுமா?

எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகம், அக்கட்சி ஆட்சியிலிருக்கும் காலத்திலேயே அது உருவாக்கப்பட்ட நோக்கம் சிதைந்து போய்க்கொண்டிருக்கிறது. இது திராவிட இயக்கம் செய்த பணிக்கு நேர்ந்திருக்கும் நெருக்கடி. அண்ணா பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படும் நிதியை மாநில அரசு அளிக்க முன்வரவேண்டும்.

## கார்ப்பரேட் காவிமயமாகும் கல்வி!



**டாக்டர் இரவீந்திரநாத், சமூக சமத்துவத்துக்கான மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர்.**

இந்தியா முழுவதுமே கல்வியில் ஏராளாமான மாற்றம் கொண்டுவரப்படுகிறது. தேசிய கல்விக்கொள்கை வரைவு அறிக்கை - 2019 இன் அடிப்படையில் இது நடக்கிறது. இன்னும் அந்த வரைவு அறிக்கை மக்களவையில் தாக்கல் செய்து நிறைவேற்றப்படவில்லை. அதற்கு முன்னதாகவே எல்லா விஷயங்களையும் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். மாநில அரசுகள் நடத்தும் பல்கலைக்கழங்களின் அதிகாரத்தை மத்திய அரசே எடுத்துக் கொள்வதற்கான முயற்சிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்து வருகிறார்கள். பெரிய பல்கலைக்கழகங்களை உருவாக்குகிறோம் என்ற பெயரில் தனியார் நிறுவனங்கள் கையில் உயர்கல்வியைக் கொடுக்கிறார்கள். குறிப்பாக 'Jio கல்வி நிறுவனங்கள்' என்று சொல்லி, நிதி ஆதாரத்தைப் பெருக்குவது, அங்கீகாரம் அளிப்பது என உதவி செய்து வருகிறார்கள். இந்த 'Jio' நிறுவனம் இதுவரை பள்ளி கூட நடத்தியதில்லை.

அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மத்திய அரசே நுழைவுத் தேர்வு, வெளியேறும் தேர்வு நடத்த திட்டமிட்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்விக்கு 'நீட்'மற்றும் 'நெக்ஸ்ட்' என நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் மூலம் மாநில அரசுகளிடம் இருந்து அதிகாரத்தைப் பறித்து கல்வியைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரத் தீவிர முயற்சி செய்து வருகிறார்கள்.

கல்வியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஒரே தேசம், அது இந்து ராஷ்டிரம் என்னும் தங்களுடைய கருத்தைப் பாடத்திட்டமாக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டுவருகிறார்கள். பிற்போக்கான கல்விமுறையைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் கண்கூடாகத் தெரிகின்றன.

கோமியத்தை மருந்தாக அறிவிப்போம் என்று மத்திய அமைச்சர் சொல்கிறார். பஞ்சகவ்யம் அதிக ஊட்டச்சத்து உடையது. அது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு அதை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். பிசியோதெரபிக்குப் பதிலாக யோகாவைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். முதலாம் ஆண்டு மருத்துவத்தில் மாற்று மருத்துவ(ஆயுர்வேதம், ஹோமியோபதி போன்றவை) முறைகளைப் படிக்க வேண்டும் என்று கொண்டுவருகிறார்கள்.

வேத காலக் கல்வி முறையே சிறந்தது என்று சொல்லி அவற்றைப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கையில் சொல்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் பிற்போக்கானவற்றைக் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

உயர்கல்வி நிறுவனங்களில் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டங்களில் செயல்படும் மாணவர்களை அச்சுறுத்துகிறார்கள். இப்படிக் கல்வியைக் கார்ப்பரேட்மயமாகவும், ஒரே தேசம் ஒரே கல்வி என்று காவிமயமாகவும் மாற்றுவது என்ற இலக்கோடு செயல்பட்டுவருகின்றனர்.

இதனால் இந்தச் சமூகம் கல்வியில் தேக்கநிலை அடையும் வாய்ப்புகள்தான் இருக்கின்றன.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**ஸ்ரீவித்யா**

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## சென்னை மாவட்டக் கூட்டம்



8.9.19 அன்று பேரவைத் தலைமை அலுவலகத்தில் சென்னை மாவட்டத் தோழர்கள் சந்திப்பு, பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை மாவட்டம் ஐந்து கிளைகளாகப் பிரிக்கப்பட்டுப் புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

## பேராசிரியர் மு.பி.பா நூல் வெளியீடு



பேராசிரியர் மு.பி.பா எழுதியுள்ள 'திராவிட இயக்கம் வளர்த்த தமிழ்' நூல் வெளியீட்டு விழா, 9.9.2019 அன்று, சென்னை அன்பகத்தில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துரைமுருகன், ஆ.இராசா, சுப.வீரபாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

## எழுத்தாளர் இளவேனில் நூல் வெளியீடு




எழுத்தாளர் இளவேனில் எழுதியுள்ள 'இருளைக் கிழித்தொரு புயற்பறவை' நூல் வெளியீட்டு விழா, 8.9.2019 அன்று, சென்னை ரஷ்யன் அறிவியல் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. திருவாளர்கள் ஜெகத்ரட்சகன், ஜி.ராம்கிருஷ்ணன், முத்தரசன், சுபவீ, வன்னியரசு, வி.பி.கலைராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கல்வியை முடக்கும் அரசு

முன்பு ஒரு முறை பள்ளிக் கல்வித் துறை இயக்குநரகத்தில் இருந்து மாணவர்களின் பிரிவை உணர்த்தும் வகையில் கையில் கயிறு கட்டக்கூடாது என்று ஓர் அறிக்கை பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டது.

அதற்கு பாஜகவிடம் இருந்து எதிர்ப்பு வந்தவுடன் அப்படி ஒரு முடிவை நாங்கள் எடுக்கவில்லை என்று அத்துறை அமைச்சர் செங்கோட்டையன் மறுப்பு தெரிவித்தார்.

அதே போன்றதொரு கூற்று இப்பொழுது அரங்கேறியுள்ளது.

2009-ஆம் ஆண்டு கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை கொண்டு வந்த மத்திய அரசு 1-4-2010 முதல் அதனை அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

அதில் செய்யப்பட்ட ஒரு திருத்தம், இனிவரும் ஒவ்வொரு கல்வி ஆண்டின் இறுதியிலும் 5, 8 ஆகிய வகுப்புகளுக்குப் பொதுத்தேர்வு நடத்தப்பட வேண்டும். இத்தேர்வில் தவறும் மாணவர்கள் அடுத்த 2 மாதங்களில் மறுதேர்வு எழுதலாம். ஆனால், எந்த மாணவரும் அவரின் கல்விக்காலம் முடியும்வரை பள்ளியிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என்று சொல்கிறது.

இதற்கான சுற்றறிக்கை பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் சார்பாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை எந்த மாணவரும் அவரின் கல்விக்காலம் முடியும்வரை பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று சொல்லும்பொழுது, இந்தப் பொதுத் தேர்வு ஏன் நடத்த வேண்டும்? தேவையே இல்லையே?

அண்மையில் பின்லாந்து நாட்டிற்குச் சென்று வந்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் செங்கோட்டையன், அங்கு 7ஆம் வகுப்புவரை மாணவர்களுக்குக் கட்டாயக்கல்வி புகுத்தப்படுவதில்லை என்று சொன்னார்.

ஆனால், ஒருசில நாள்களுக்குள்ளாகவே 5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்குப் பொதுத்தேர்வு நடத்துவதாக துறை இயக்குநரகம் அறிக்கை அனுப்புகிறது.


கல்வியாளர்கள், பெற்றோர்கள், பொதுமக்களிடமிருந்து கடும் கண்டனங்கள் வந்தவுடன் திடீரென அமைச்சர் செங்கோட்டையன், அப்படி ஒரு திட்டம் எங்களிடம் இல்லை. அமைச்சரவை கூடித்தான் இதுகுறித்து முடிவு செய்ய வேண்டும் என்று பேட்டி கொடுக்கிறார்.

அப்படியானால் அமைச்சருக்கே தெரியாமல் இதுபோன்ற அறிக்கைகளை இயக்குநர் அனுப்பிக் கொண்டிருக்கிறாரா?

இது ஒருபுறமிருக்க புதியகல்விக்கொள்கையின் அடிப்படையில் கொண்டுவரும் இந்தப் பொதுத்தேர்வு என்பது, பார்ப்பனர் அல்லாத ஏழை, நடுத்தர மாணவர்களின் கல்வியைப் பள்ளி வளாகத்திற்குள்ளேயே முடக்கிப் போடுவதாக அமைகிறது.

இந்தப் புதிய கல்விக் கொள்கை பார்ப்பனிய நலம் சார்ந்து, பார்ப்பனர் அல்லாத மாணவர்களின் கல்வி எதிர்காலத்தைப் பாதிக்கிறது என்பதால் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

# ஒரு மனிதன் ஒரு இயக்கம்




**வெற்றிச்செல்வன்**

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் மறைவின் போது, 'ஃப்ரண்ட்லைன்' இதழ் கலைஞர் குறித்த ஒரு சிறப்பிதழை வெளியிட்டது. தற்போது கலைஞரின் முதல் நினைவு நாளையொட்டி, அச்சிறப்பிதழ் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சிக்கான கலைஞரின் பங்களிப்பையும், பேருழைப்பையும் விவரிக்கிறது இந்நூல். பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் கலைஞரைப் பன்முக நோக்கில் ஆராய்ந்து கட்டுரைகளை எழுதியுள்ளது, இந்நூலின் சிறப்பம்சம்.

தமிழக அரசியலின் போக்கினை நிர்ணயம் செய்யும் ஆற்றலாக விளங்கிய கலைஞரின் அரசியல் அனுபவத்தைத் தமிழகத்தின் பல்வேறு கட்சித் தலைவர்களின் கட்டுரைகள் விவரிக்கின்றன. தேவ கவுடா, முலாயம்சிங் யாதவ், சீத்தாராம் யெச்சூரி உள்ளிட்டோரின் கட்டுரைகள் இந்திய அரசியலில் அவரது பங்களிப்பைக் குறிப்பிடுகின்றன.

பெரியாரின் கனவுகளை நடைமுறைச் சாத்தியமாக்கிய சமூகநீதிக் களமாகட்டும், அல்லது அண்ணாவின் முழக்கமான மாநில சுயாட்சிக் களமாகட்டும், கலைஞர் இவை குறித்துக் காட்டிய அக்கறை நூலின் பக்கங்கள் அனைத்திலும் இழையோடுகிறது. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பயணிக்கச் செய்வதற்கான கலைஞரின் அர்ப்பணிப்பும், உழைப்பும் பொருளாதார அறிஞர்களால் ஆராயப்பட்டுள்ளது.

திரைப்படங்களின் மீதான திராவிட இயக்கத்தின் தாக்கம் இயல்பாக நடந்ததொரு நிகழ்வு. புராணங்களைப் பேசிய திரைப்படங்கள் புரட்சி பேசத் தொடங்கியது திராவிட இயக்கத்தினால் மட்டுமே. திரைப்படங்களின் வாயிலாகப் பகுத்தறிவுக் கருத்துகள் மக்களை எளிதாகச் சென்றடைந்தன. இந்தக் கருத்துப் பரிமாற்றத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டவர்களுள் கலைஞர் முதன்மையானவர். ஆனால் திரையுலக வாழ்க்கையிலும் அவர் சந்தித்த இடர்கள் சாதாரணமானவை அல்ல. கடின உழைப்பிற்குப் பிறகே, கலைஞர் வெற்றிக் கனியை எட்ட முடிந்தது. சாமானியனையும் சென்றடைந்த கலைஞரின் சாதனையைக் கோடிட்டுக் காட்டுகிறது இந்நூல்.

தமிழகம் மட்டுமல்லாது இந்திய வரலாற்றின் முக்கிய தருணங்களையும் பதிவு செய்திருக்கும் இந்நூல் ஒரு வரலாற்று ஆவணம்.

**ஒரு மனிதன் ஒரு இயக்கம்**
**வெளியீடு : ஃப்ரண்ட்லைன்**
**விலை : ரூ. 200/**

## சேலம் கலந்தாய்வுக் கூட்டம்



சேலம் மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொறுப்பாளர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் தோழர் சுந்தரவதனம் தலைமையில் நடைபெற்றது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. 2019 அக்டோபர் 13 அன்று 'பெண்களும் பெரியாரும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்த வேண்டும் எனவும் இக்கருத்தரங்கில் திமுக மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் தோழர் அருள்மொழி, எழுத்தாளர் தோழர் உமா ஆகியோரை அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

2 தோழர் மு.அபினேஷ் அவர்களை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக நியமிப்பதற்கு, பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன், மாநில இளைஞரணிச் செயலாளர் தோழர் சந்தானம் ஆகியோரிடம் பரிந்துரை செய்ய முடிவெடுக்கப்பட்டது.

3. 2019 , செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியார் அவர்களின் 141ஆம் பிறந்த நாளினைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,